

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.09.2025) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள சிப்காட் குருபரபள்ளி தொழிற் பூங்காவில் அமைந்துள்ள டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் 2 விரிவாக்க திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஒரு புதிய மேம்படுத்தப்பட்ட உற்பத்தி வரிசையையும் தொடங்கி வைத்து, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களுக்கு அந்நிறுவனத்தில் பணியாற்றிட பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கே. கோபிநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய். வழிகாட்டி நிறுனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில்ராஜ், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் சி. தினேஷ் குமார், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் பிங்க் செங், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தாய்லாந்து நிறுவனத்தின் தலைவர் ஜேம்ஸ் NG, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தைவான் நிறுவனத்தின் துணைத் தலைவர் மார்க் கோ, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் தலைவர் பென்ஜமின் லின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.09.2025) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள சிப்காட் குருபரபள்ளி தொழிற் பூங்காவில் அமைந்துள்ள டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் 450 கோடி ரூபாய் முதலீட்டில் 400–க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 2 விரிவாக்க திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஒரு புதிய மேம்படுத்தப்பட்ட உற்பத்தி வரிசையையும் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கே. கோபிநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய். வழிகாட்டி நிறுனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில்ராஜ், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் சி. தினேஷ் குமார், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் பிங்க் செங், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தாய்லாந்து நிறுவனத்தின் தலைவர் ஜேம்ஸ் NG, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தைவான் நிறுவனத்தின் துணைத் தலைவர் மார்க் கோ, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா நிறுவனத்தின் தலைவர் பென்ஜமின் லின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## மலைவாழ் மக்களின் நலன்களுக்காக

# நீலகிரி மாவட்ட சுகாதாரப் பேரவைக் கூட்டம்!

## அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்!

நீலகிரி, செப். 13-

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான சுகாதார பேரவை கூட்டத்தினை, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இக்கூட்டத்தில், அரசு தலைமைக் கொறடா தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். ஒரு நாட்டின் வளர்ச்சி கல்வி மற்றும் மருத்துவம் ஆகும். எனவே கல்வி மற்றும் மருத்துவத்துறையினை மேம்படுத்தும் வகையில் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு அரசால் செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் அரசு மருத்துவமனை, கோத்தகிரி அரசு மருத்துவமனையில் கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பது நீலகிரி மாவட்டத்திற்கு கிடைத்த ஒரு மைல் கல் ஆகும். நோயாளிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் இம்மருத்துவமனையில் உள்ளது. இம்மருத்துவமனைக்கு 1500க்கும் மேற்பட்ட வெளிப்புற நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். குறிப்பாக, மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் நோயாளிகளிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சுகாதார பேரவை கூட்டம் நடத்தப்படுகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் 2024-2025 ஆம் ஆண்டிற்கான மாவட்ட சுகாதார பேரவை கூட்டம் இன்று முழுவதும் நடத்தப்பட்டு அனைத்து வட்டாரம் மற்றும் துறைகளில் சுகாதாரத்துறை மேம்பட தேவையான கட்டமைப்பு வசதிகள், மருத்துவ உபகரணங்கள், போக்குவரத்து வசதி போன்றவை குறித்து ஆலோசிக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்டு, மாவட்ட அளவிலேயே சரி செய்யக் கூடியவை, மாநில அரசு உதவியுடன் சரி செய்ய கூடியவை மற்றும் சுகாதார பேரவை மூலம் சரி செய்யக்கூடியவை என பிரிக்கப்பட்டு,மாநில பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டு மாநில பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன் திட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படவுள்ளது.

இவ்வாறு தலைமைக் கொறடா தெரிவித்தார்.

உடன் உதகை அரசு மருத்துவக்கல்லூரி. மருத்துவமனை முதல்வர் மரு.ஶ்ரீசரவணன், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு. ராஜசேகரன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) சோமசுந்தரம், நகர்மன்ற தலைவர்கள் திருமதி. வாணீஸ்வரி (உதகை), திருமதி பரிமளம் (கூடலூர்) உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




ஈரோடு மாவட்டம், வெங்கம்பூர் (தேர்வு நிலை) பேரூராட்சிக்குட்பட்ட கல்வெட்டுபாளையம் பகுதியில் நகர்ப்புற பசுமையாக்கல் இயக்கம் (URBAN GREENING CAMPAIGN) நடத்திய மரம் நடும் விழாவில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டுவைதார். இதில் வனச்சரக அலுவலர் வே.சரவணன், வெங்கம்பூர் பேரூராட்சி தலைவர் தனாலட்சுமி தங்கமுத்து, துணைத் தலைவர் நிலாச்செல்வி திருநாவுகரசு, செயல் அலுவலர் க.செல்வகுமார் உள்பட பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், வனச்சரக அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### லேணா (எ) இரா. இலக்குமணன்

### செப்டம்பர் 13 (1998)



கழகம் தொடங்கிய காலந்தொட்டு உறுப்பினராகி, சுமார் நாற்பது ஆண்டு காலமாக தனது பகுதியில் கழக வளர்ச்சிக்காக பாடுபட்டவர்.

திருத்துறைப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக ஒரு முறையும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றதோடு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று ஆறு மாத சிறைவாசம் அனுபவித்தார். மொழிப்போர் தியாகி என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

# திருச்சி தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரை!

திருச்சி, செப். 13-

9/09/25 அன்று தி.மு கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் அவைத்தலைவர் என். கோவிந்தராஜ் தலைமையில் மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சேகரன், சபியுல்லா, மாநில அணி நிர்வாகி செந்தில், பகுதி கழகச் செயலாளர் மோகன், மற்றும் . தெற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

ஆயிரம் ஆண்டுகளாக அறிவார்ந்த பலரின் கனவாக இருக்கும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் கனவாக எழுந்த சுயமரியாதை இயக்கத்தையும், புரட்சியாளர் பெரியாரையும் போற்றி அவரது திருவுருவ படத்தினை திறந்து வைத்தும், தமிழ கத்தின் தொழில்வளத்தை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பை பெருக்கவும், அந்நிய நாட்டின் முதலீடுகளை ஈர்த்து வந்த தமிழக முதல்வர், கழக தலைவர் அவர்களுக்கு இம்மாவட்ட செயற்குழு பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

50 ஆண்டுகாலத்திற்கும் மேலாக அரசியல் பொது வாழ்வில் சொல்லணா தியாகங்களை புரிந்து, மிசாவில் சிறையில் அடைக்கப்பட்டு, கொடுமைக்கு ஆளான நமது கழகத்தலைவர் அவர்களை, ஒன்றிய அரசின் கைக்கூலியாக செயல்பட்டு தான் செல்லும் இடங்களிலெல்லாம், தலைவர் அவர்களை ஒருமையில் பேசி விமர்சித்து வரும் அடிமை எடப்பாடி பழனிச்சாமியை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கின்றது.

3. கரூர் மாவட்டத்தில் நடைபெறும் முப்பெரும் விழாவில் நமது திருச்சி தெற்கு மாவட்டத்தின் சார்பாக பெருந்திரளாக கலந்து கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

இவ்வாறு தீர்மனாங்கள் நிறைவேற்றப்பட்டன.

# சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிவிப்பு!



சேலம், செப். 13 -

சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை (14.09.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 3.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க. ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் அமைப்பாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், BLA2, மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வருகை,

2. கழக முப்பெரும் விழா,

3. ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டங்கள்,

4. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.

# திருச்சி மத்திய, வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி – ந. தியாகராஜன் அறிக்கை!





திருச்சி,செப்.13-

திருச்சி மத்திய மாவட்ட திமுக செயலாளர் க. வைரமணி, வடக்கு மாவட்ட திமுக செயலாளர்ந.தியாகராஜன் MLA ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் இன்று( 13.09.2025ம் நாள் சனிக்கிழமை) காலை 08.00 மணியளவில் தில்லை நகர் கழக முதன்மை செயலாளர், அவர்களின் அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர்கள் திரு. பேரூர் தர்மலிங்கம் மற்றும் A.அம்பிகாபதி ஆகியோர் தலைமையிலும், கழக முதன்மை செயலாள ரும், டெல்டா மண்டல பொறுப்பாளருமான கே.என். நேரு முன்னிலையிலும் நடைபெறவிருக்கின்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட, மாநகர அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிள், முன்னாள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்றஉறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு இக்கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: 1 2026 சட்டமன்றத் தேர்தல் பணி

2 முப்பெரும் விழா

3 கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# திருவாரூர் மாவட்டத்தில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவாரூர்,செப்13.

திருவாரூர் மாவட்டத்தை உள்ளடக்கிய திருவாரூர், நன்னிலம் ,மன்னார்குடி,திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதிகளில் தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலின்படி வாக்குச்சாவடி பி.எல்.ஏ.2 வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் பி.டி.ஏ வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்களுக்கான ஆலோசனை கூட்டங்கள் நடைபெறவிருக்கிறது இதுகுறித்து மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளதாவது,

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமாம் திருவாரூரில் தலைமைக்கழக அறிவுறுத்தல்படியும் முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் வழிகாட்டுதல்களின்படியும் திருவாரூர் மாவட்டத்தின் நன்னிலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி பி.எல்.ஏ.2 வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் பி.டி.ஏ.வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்களுக்கான ஆலோசனை கூட்டம் இன்று (13.09.2025 – சனிக்கிழமை) காலை10.00 மணி அளவில் புதுக்குடி சக்தி கணேஷ் திருமண அரங்கில் நடைபெற உள்ளது.

மேலும் திருவாரூர் சட்டமன்ற சட்டமன்ற தொகுதிக்கான வாக்குச்சாவடி பி.எல்.ஏ.2 வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் பி.டி.ஏ.வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்களுக்கான ஆலோசனை கூட்டம் 14.09.2025 அன்று காலை 10.00 மணிக்கு திருவாரூர் பொன் தமிழ் திருமண அரங்கத்தில் நடைபெற உள்ளது. இந்த கூட்டங்களில் கழக முப்பெரும் விழா , ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்த ஆலோசனைகள் நடைபெறவிருக்கிறது.

எனவே இந்த கூட்டங்களில் நன்னிலம் மற்றும் திருவாரூர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச் சாவடி பி.எல்.ஏ.2 வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்களும், தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் தவறாது அந்தந்தகூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஒசூர் சட்டமன்றத் தொகுதி ஒசூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ராமமூர்த்தி ஏற்பாட்டில் கொத்த கொண்டப்பள்ளி கிராமத்தைச் சார்ந்த சுமார் 200 க்கும் மேற்பட்டோர் அருண் தலைமையில் பல்வேறு கட்சிகளிலிருந்து விலகி மாவட்டச் செயலாளர் ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ், முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர்.உடன் ஒசூர் வடக்கு பகுதி துணை செயலாளர் மஞ்சுநாத், யுவராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.